**நிதி முகாமைத்துவ மீளமைப்பு நிகழ்ச்சித்திட்டம் (வருமான நிர்வாக நவீனமயப்படுத்தல்) 2013**

நிதி முகாமைத்துவ மீளமைப்பு நிகழ்ச்சித்திட்டத்தின் (வருமான நிர்வாக நவீனமயப்படுத்தல்) 2013 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் மீதான கணக்காய்வு, இலங்கை சனநாயக சோசலிச குடியரசிற்கும் (ஜீஓஎஸ்எல்) ஆசிய அபிவிருத்தி வங்கிக்கும் (ஏடிபீ) இடையில் கைச்சாத்திடப்பட்ட 2004 திசெம்பர் 20 ஆந் திகதிய 2132 ஆம் எஸ்ஆர்ஜ ஆம் இலக்க கடன் உடன்படிக்கையின் IV ஆம் உறுப்புரையின் 4.05(ஆ) ஆம் பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியல் யாப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கமைய எனது பணிப்பின் கீழ் மேற்கொள்ளப்பட்டது.

**1.2 நிகழ்ச்சித்திட்டத்தின் அமுலாக்கல், குறிக்கோள்கள், நிதியளித்தல் மற்றும் காலப்பகுதி என்பன**

நிதி முகாமைத்துவ மீளமைப்பு நிகழ்ச்சித்திட்டத்தின் (வருமான நிர்வாக நவீனமயப்படுத்தல்) கடன் உடன்படிக்கையின்படி, நிதி மற்றும் திட்டமிடல் அமைச்சு நிகழ்ச்சித்திட்டத்தின் நிறைவேற்றல் மற்றும் அமுலாக்கலிற்காக பொறுப்பாக உள்ளது. வருமான முகாமைத்துவத்தின் நவீனமயப்படுத்தலுக்காக உபகரண கொள்வனவுகளில் கவனம் செலுத்தி ஆரம்ப நிறுவனரீதியாக வலுப்படுத்துவதற்கு ஆதரவளிப்பதே செயற்திட்டத்தின் குறிக்கோளாகும். கடன் உடன்படிக்கையின்படி, நிகழ்ச்சித்திட்டத்தின் மொத்த மதிப்பிடப்பட்ட கிரயம் ஐ.அ.டொலர் 15 மில்லியனானதுடன் முழுத் தொகையும் ஆசிய அபிவிருத்தி வங்கியால் நிதியளிக்க உடன்பாடு காணப்பட்டது. நிகழ்ச்சித்திட்டமானது அதன் நடவடிக்கைகளை 2004 திசெம்பர் 20 இல் ஆரம்பித்திருந்ததுடன் 2007 திசெம்பர் 31 அளவில் பூர்த்திசெய்யப்பட வேண்டுமென பட்டியலிடப்பட்டிருந்தது. எவ்வாறாயினும், ஆசிய அபிவிருத்தி வங்கியானது 2011 திசெம்பர் 31 வரை நிகழ்ச்சித்திட்டத்தின் பூர்த்தியாக்கல் திகதி நீடிக்கப்பட்டிருந்ததுடன் இலங்கை அரசாங்கத்தால் வேண்டுகை செய்யப்பட்டதுடன் நிதிகளின் மீளளிப்பிற்காக 2012 மார்ச் 16 வரை ஒதுக்கப்பட்டது. எவ்வாறாயினும் செயற்திட்டம் இலங்கை அரசாங்கத்தின் நிதிகளைப் பயன்படுத்தி 2013 திசெம்பர் 31 வரை அதன் செயற்பாடுகளை தொடர்ந்திருந்தது.

**1.3 நிதிக்கூற்றுக்களிற்கான முகாமைத்துவத்தின் பொறுப்பு**

இந்த நிதிக்கூற்றுக்கள் பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு தத்துவங்களிற்கேற்ப தயாரிக்கப்பட்டு நியாயபூர்வமாகச் சமர்பிக்கப்படுதல் முகாமைத்துவத்தின் பொறுப்பாகும். மோசடி அல்லது தவறுகள் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களைக் கொண்டிராத நிதிக் கூற்றுக்களைத் தயாரித்து நியாயபூர்வமாகச் சமர்ப்பிப்பது தொடர்பான உள்ளகக் கட்டுப்பாட்டை வடிவமைப்பதும் அமுலாக்கலும் அதனைப் பேணுதலும் பொருத்தமான கணக்கீட்டுக் கொள்கைகளைத் தெரிவு செய்து பயன்படுத்துவதும் சந்தர்ப்பத்திற்கு ஏற்றவாறு போதியளவு கணக்கீட்டு மதிப்பீட்டைத் தயாரிப்பதும் இப் பொறுப்பில் உள்ளடங்கும்.

**2. கணக்காய்வின் நோக்கெல்லையும் அபிப்பிராயத்தின் அடிப்படையும்**

என்னுடைய கணக்காய்வின் அடிப்படையில் இந்த நிதிக்கூற்றுக்களின் மீது அபிப்பிராயம் தெரிவிப்பது எனது பொறுப்பாகும். இவ்வறிக்கையிலுள்ள கணக்காய்வு அபிப்பிராயம், கருத்துரைகள், காண்புகள் என்பன கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்ட நிதிக் கூற்றுக்களின் மீளாய்வு, கொடுக்கல் வாங்கல்களின் மாதிரிகளது போதியளவான செவ்வை பார்த்தல் என்பவற்றின் அடிப்படையில் எழுந்தனவேயாகும். அவ்வாறான மீளாய்வினதும் செவ்வைபார்த்தலினதும் நோக்கெல்லையும் பரப்பும் என்னால் பெற்றுக்கொள்ளக் கூடியதாகவிருந்த பதவியினர், ஏனைய வளங்கள், நேரம் என்பவற்றின் வரையறைக்குட்பட்டு இயலுமான அளவில் விரிவானதோர் கணக்காய்வு உள்ளடக்கத்தைக் கொண்டதாகக் காணப்பட்டது. நிதிக் கூற்றுக்கள் பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் அற்றவை என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்ளத்தக்க வகையில் கணக்காய்வானது இலங்கைக் கணக்காய்வு நியமங்களுக்கு அமைய மேற்கொள்ளப்பட்டது. நிதிக்கூற்றுக்களில் உள்ள தொகைகளினதும் வெளிப்படுத்தல்களினதும் ஆதாரத்திற்கான சான்றுகளின் பரிசோதனை, பயன்படுத்தப்பட்ட கணக்கீட்டு கொள்கைகளினையும் குறிப்பிடத்தக்க மதிப்பீடுகளினையும்

மதிப்பாய்வு செய்தல், நிதிக்கூற்றுக்களினைத் தயாரிக்கையில் செய்த தீர்ப்புக்கள், அதன் ஒட்டுமொத்த சமர்ப்பித்தல் என்பவற்றை கணக்காய்வு உள்ளடக்கியுள்ளது. எனது கணக்காய்வு நோக்கங்களிற்கு அவசியமானதென எனது உயர் அறிவிற்கும் நம்பிக்கைக்கும் தென்பட்ட போதிய தகவல்களையும் விளக்கங்களையும் நான் பெற்றுக் கொண்டேன் ஆகையினால் எனது அபிப்பிராயத்திற்கான நியாயமான அடிப்படையை எனது கணக்காய்வு வழங்கியதென்று நான் நம்புகின்றேன். பின்வருவனவற்றை மதிப்பீடுவதற்கு அவசியமானவையாகக் காணப்பட்ட முறைமைகள் மற்றும் கட்டுப்பாடுகள், கொடுக்கல் வாங்கல்கள் சொத்துக்கள், பொறுப்புக்கள், கணக்கீட்டுப் பதிவேடுகள் என்பவற்றின் அவ்வாறான செவ்வையினையும் அப் பரிசோதனை உள்ளடக்கியுள்ளது.

(அ) நிகழ்ச்சித்திட்ட முகாமைத்துவம் மீதான திருப்திகரமான கட்டுப்பாட்டையும், நிகழ்ச்சித்திட்ட தொழிற்பாடுகள் தொடர்பான, ஏடுகள், பதிவேடுகள் முதலியவற்றின் நம்பகத் தன்மையையும் நிச்சயப்படுத்துவதற்கேற்றவாறு உள்ளகக் கட்டுப்பாட்டின் நோக்கில் முறைமைகளும் கட்டுப்பாடுகளும் போதியளவில் இருந்தனவா என்பதும்,

(ஆ) இலங்கை அரசாங்கம் மற்றும் கடனளிக்கும் முகவர் ஆகியோரின் நிதிகளிலிருந்தான நிகழ்ச்சித்திட்ட செலவினங்கள், நிதிசார் மற்றும் பௌதீக ரீதியில் நிகழ்ச்சித்திட்டத்தின் முன்னேற்றம், நிகழ்ச்சித்திட்ட தொழிற்பாடுகளிலிருந்து உருவாகிய சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள், கடன் முதலியவற்றிலிருந்து மேற்கொள்ளப்பட்ட கொள்வனவுகளை இனங்காணல் என்பவற்றைத் தொடர்ந்து செல்லும் அடிப்படையில் காட்டும் வண்ணம் போதிய கணக்கீட்டுப் பதிவேடுகள் பேணப்பட்டிருந்தனவா என்பதும்,

(இ) நிகழ்ச்சித்திட்டத்தின் அமுலாக்கலுக்காகக் கடைபிடிக்கப்பட்ட வகைப்படுத்தலுக்கிணங்க செலவினங்கள் சரியாக இனங்காணப்பட்டிருந்தனவா என்பதும்,

(ஈ) நிதிக்கூற்றுக்கள் பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டுத் தத்துவங்களின் அடிப்படையில் தயாரிக்கப்பட்டிருந்தனவா என்பதும்,

(உ) முன்னைய ஆண்டு கணக்காய்வு அறிக்கையில் குறிப்பிடப்பட்ட விடயங்களை திருத்துவதற்கு முகாமைத்துவத்தினால் திருப்திகரமான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருந்தனவா என்பதும் ஆகும்.

## 3. அபிப்பிராயம்

எனது ஆய்வின் மூலம் தென்படுவதும் எனக்குக் கிடைக்கப்பெற்ற சிறந்த தகவல்கள் மற்றும் எனக்கு வழங்கப்பட்ட விளக்கங்களுக்கும் அமைய, இந்த அறிக்கையின் 5 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்ட விடங்களிலிருந்து எழுகின்ற சீராக்கல்களின் தாக்கங்களைத் தவிர,

(அ) நிகழ்ச்சித்திட்டமானது 2013 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்காக முறையான கணக்கேடுகளைப் பேணியிருந்ததுடன் நிதிக்கூற்றுக்களானவை பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டுத் தத்துவங்களிற்கிணங்க 2013 திசெம்பர் 31 இல் உள்ளவாறான செயற்திட்டத்தின் நிலைவரத்தை உண்மையாகவும் நியாயபூர்வமாகவும் காட்டுகின்றன என்றும்,

(ஆ) ஏற்பாடு செய்யப்பட்ட நிதிகள் அவை ஏற்பாடு செய்யப்பட்ட நோக்கங்களுக்காகவே பயன்படுத்தப்பட்டிருந்தன என்றும்,

(இ) முன்னைய ஆண்டு கணக்காய்வு அறிக்கையில் குறிப்படப்பட்ட விடயங்களை திருத்துவதற்கு முகாமைத்துவத்தினால் திருப்திகரமான அளவீடுகளை எடுக்கப்பட்டிருந்தன என்றும்,

நான் அபிப்பிராயப்படுகின்றேன்.

## 4. நிதிக்கூற்றுக்கள்

### 4.1 நிதிசார் செயலாற்றல்

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின்படி, 2013 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிகழ்ச்சித்திட்ட செலவினம் ரூபா 20.16 மில்லியனானதுடன் 2013 திசெம்பர் 31 இல் உள்ளவாறான திரண்ட செலவினம் ரூபா 1,807.7 மில்லியனாகும். மீளாய்வாண்டிற்கான செலவினம், 2012 ஆம் ஆண்டிற்கான செலவினம் மற்றும் 2013 திசெம்பர் 31 இல் உள்ளவாறான திரண்ட செலவினம் என்பவற்றின் பொழிப்பை பின்வரும் கூற்று காட்டுகின்றது.

| செலவின விடயம் | திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான செலவினம் | | 2013 திசெம்பர் 31 இல் உள்ளவாறான திரண்ட செலவினம் |
|---|---|---|---|
| | 2013 | 2012 | |
| | ரூபா மில்லியன் | ரூபா மில்லியன் | ரூபா மில்லியன் |
| தளபாடம் மற்றும் பொருத்திகள் | - | - | 62.53 |
| உள்ளூர் பகுதி வலையமைப்பு | - | 567.60 | 862.76 |
| சிவில் வேலைகள் | - | - | 4.43 |
| அபிவிருத்தி செலவினங்களிற்கான பெறுமதிசேர் வரி மற்றும் ஏனைய வரிகள் | - | 112.74 | 135.66 |
| செயற்திட்ட முகாமைத்துவம் | 0.04 | 0.16 | 6.01 |
| கடன் வட்டி மற்றும் கடப்பாட்டு கட்டணங்கள் | - | - | 68.37 |
| நிதிக் கற்கைகளுக்கான நிறுவனத்தின் தாபிப்பு | 20.12 | 647.82 | 667.94 |
| மொத்தம் | 20.16 | 1,328.32 | 1,807.7 |

## 5. கணக்காய்வு அவதானிப்புக்கள்

### 5.1 சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடன் இணங்காமை

நிதிப் பிரமாணம் 756 இன் பிரகாரம், நிகழ்ச்சித்திட்டத்தின் சொத்துக்களின் வருடாந்த கணிப்பீட்டுச் சபை மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. மேலும், 1978 திசெம்பர் 19 ஆந் திகதிய 842 ஆம் இலக்க திறைசேரி சுற்றறிக்கையின் பிரகாரம் நிலையான சொத்துப் பதிவேடொன்றும் 2002 நவம்பர் 28 ஆந் திகதிய ஐஏஐ/2002/02 ஆம் இலக்க திறைசேரி சுற்றறிக்கையின் பிரகாரம் கணனிகள் மற்றும் உபபாகங்களின் பதிவேடொன்றும் பேணப்பட்டிருக்கவில்லை. ஆகவே, வருமான நிர்வாக நிறுவனங்களுக்கு இடையில் பங்கிடுவதற்கு செயற்திட்ட கண்காணிப்பு பிரிவால் கொள்வனவு செய்யப்பட்ட ரூபா 62,526,875 பெறுமதியான சொத்துக்களின் பௌதீக உள்ள தன்மையினை கணக்காய்வில் மதிப்பிடுவதற்கு இயலாதிருந்தது.

**5.2 கணக்காய்விற்கான ஆவணச்சான்றுகள் இன்மை**

வருடாந்த செயல்நடவடிக்கை திட்டத்தின் பிரதிகள் மற்றும் அவற்றின் முன்னேற்ற அறிக்கைகள் செயற்திட்ட நடவடிக்கைகளின் நிதி மற்றும் பௌதீக முன்னேற்றங்களின் மதிப்பாய்விற்கு இயலுவதற்கு கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. மேலும், கொள்வனவு செய்யப்பட்ட சொத்துக்களின் பட்டியல் மற்றும் ஏனைய பொருளிருப்பு பதிவேட்டு விடயங்கள் மற்றும் உள்நாட்டு இறைவரி திணைக்களம், மதுவரித் திணைக்களத்திற்கு கையளித்திருந்தமை என்பன கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

**6 நிதி மற்றும் பௌதீகச் செயலாற்றல்**

**6.1 நிதிகளின் பயன்பாடு**

மீளாய்வாண்டிற்கான நிதிகளின் நிதியளிப்பு, பாதீட்டு ஏற்பாடு, மீளாய்வாண்டின் போதான நிதிகளின் பயன்பாடு மற்றும் 2013 திசெம்பர் 31 இல் உள்ளவாறான திரண்ட செலவினம் என்பன தொடர்பான சில முக்கிய விபரங்கள் கீழே தரப்படுகின்றன.

| மூலம் | வழங்கப்பட வேண்டுமென உடன்பட்ட தொகை | | வருடாந்த பாதீட்டில் செய்யப்பட்ட ஏற்பாடு | மீளாய்வாண்டின் போது பயன்படுத்திய தொகை | | 2013 திசெம்பர் 31 இல் உள்ளவாறு திரட்டிய செலவினம் | |
|---|---|---|---|---|---|---|---|
| | ஐ.அ.டொலர் மில் | ரூபா. மில் | ரூபா. மில் | ஐ.அ.டொலர் மில் | ரூபா. மில் | ஐ.அ.டொலர் மில் | ரூபா. மில் |
| ஆசிய அபிவிருத்தி வங்கி | 15 | 1,920 | 45 | - | - | 10 | 1,354 |
| இலங்கை அரசாங்கம் | - | - | 10 | 0.18 | 23.92 | 3.34 | 428 |
| **மொத்தம்** | **15** | **1,920** | **55** | **0.18** | **23.92** | **13.34** | **1,782** |

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) மேற்குறிப்பிட்ட தகவல்களின் பிரகாரம், ஆசிய அபிவிருத்தி வங்கியிடமிருந்தான பெறுகைகளின் ரூபா 1,920 மில்லியனிற்கு சமமான ஐ.அ.டொலர் 15 மில்லியனில், ரூபா 1,354 மில்லியனிற்கு சமமான ஐ.அ.டொலர் 10 மில்லியன் பயன்படுத்தப்பட்டிருந்தது. ஆகவே, நிகழ்ச்சித்திட்டதிற்கான மொத்த ஏற்பாடுகளின் 66 சதவீதம் நிகழ்ச்சித்திட்டத்தின் நீடிக்கப்பட்ட காலம் உள்ளடங்கலாக ஏழு ஆண்டுகளின் இறுதி வரையும் பயன்படுத்தப்பட்டிருந்தது.

(ஆ) கடன் உடன்படிக்கையின் பிரகாரம், நிகழ்ச்சித்திட்டத்தின் பிரதான நோக்கம் உள்நாட்டு இறைவரித் திணைக்களம், மதுவரித் திணைக்களம் மற்றும் இலங்கை சுங்கம் என்பவற்றிற்கு உபகரணங்களை வழங்கி வருமான நிர்வாகத்தை வலுப்படுத்துவதாக உள்ளது. ஆகவே, உள்நாட்டு இறைவரித் திணைக்களத்திற்கு உபகரணங்களை வழங்கி வருமான நிர்வாகத்தை வலுப்படுத்துவதற்காக ரூபா 1,031 மில்லியன் செலவழிக்கப்பட்டிருந்தது. மேலும் நிதி மற்றும் திட்டமில் அமைச்சிற்காக ரூபா 701.28 மில்லியன் செலவழிக்கப்பட்டிருந்ததுடன் அது ரூபா 667.94 மில்லியன் கிரயத்தில் நிதிக் கற்கைகள் நிறுவகத்தில் (மிலோதா) மேற்கொள்ளப்பட்ட அபிவிருத்தி நடவடிக்கைகளை உள்ளடக்குகிறது. மேலும், மது வரித் திணைக்களத்திற்கு உபகரணங்களை வழங்கி

வருமான நிர்வாகத்தை வலுப்படுத்துவதற்காக ரூபா 2.29 மில்லியன் செலவழிக்கப்பட்டிருந்தது.

அவற்றின் மீது பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(i) பெறப்பட்ட தகவல்களின் பிரகாரம், பிரதான வருமான வருமான நிறுவனம் ஒன்றிலுள்ள இலங்கை சுங்கத்திற்காக செய்யப்பட்ட மொத்த ஒதுக்கீட்டில் அபிவிருத்தி செலவினங்கள் எதுவும் செலவழிக்கப்பட்டிருக்கவில்லை. மொத்த செலவினத்தில் ரூபா 2.29 மில்லியன் அல்லது 0.13 சதவீதம் மாத்திரம் மதுவரித் திணைக்களத்திற்கு செலவழிக்கப்பட்டிருந்தது.

(ii) நிதிக் கற்கைகள் நிறுவகம் தாபிப்பதற்கு சுங்கத் திணைக்களத்தின் கட்டடிம் நவீனமயப்படுத்துவதற்காக மேற்கொள்ளப்பட்ட வேலைகள் நிகழ்ச்சித்திட்டத்தின் நோக்கங்களை அடைவதற்கு நேரடியாக தொடர்புபட்டிருக்கவில்லை என அவதானிக்கப்பட்டது. மேலும், இது தொர்பில் ஏற்பட்ட ரூபா 287.97 மில்லியன் தொகையான செலவினங்களிற்காக முறையான அங்கீகாரம் பெறப்பட்டிருக்கவில்லை.